

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 303 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 30 – செவ்வாய்க்கிழமை 13 ஜூன் 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 303 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 30 - Tuesday 13 June 2023 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


### சேலத்துக்கும் தலைவர் கலைஞருக்குமான நட்பு, அன்பான நட்பு – குடும்ப நட்பு!

# சேலத்திற்கு இன்னும் ஏராளமான திட்டங்கள்!

## சேலம் அரசு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சேலம், ஜூன் 13 -**

**சேலத்தில் நேற்று முன்தினம் காலை, கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அரசின் பல்வேறு துறை சார்பில் நல உதவிகள் வழங்கி விழாவில் பேருரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "சேலத்திற்கும் தலைவர் கலைஞருக்குமான நட்பு அன்பான நட்பு, குடும்ப நட்பு!" என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்.**

**மேலும் முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், "சேலத்திற்கு இன்னும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றக் காத்திருக்கிறோம்!" என்று குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11.6.2023) சேலம், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு :-

இந்த நிகழ்ச்சியைப் பற்றி இங்கே எனக்கு முன் உரையாற்றியிருக்கக்கூடிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், மிகுந்த பெருமையோடு இங்கே குழுமி யிருக்கக் கூடிய கூட்டத்தினுடைய எழுச்சியைப் பற்றி எடுத்துச் சொன்னார். அந்த அளவிற்கு இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்று சொன்னால், இந்த நலத்திட்ட நிகழ்ச்சியை, நலத்திட்ட விழாவாக மட்டுமல்லாமல், ஒரு மாநாடு போல் ஏற்பாடு செய்திருக்கக்கூடியவர் நேரு அவர்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2023) சேலம் மாநகரில் உள்ள பேரறிஞர் அண்ணா பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேலம் மாநகராட்சி மேயர் ஆர். ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் பொன்.கௌதம் சிகாமணி, எஸ்.ஆர். பார்த்திபன், ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், துணை மேயர் திருமதி மா. சாரதா தேவி, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி ஆணையர் எஸ்.பாலசந்தர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மலைக்கோட்டை வீரர் நேரு திரட்டிய மக்கள் கோட்டை!

மலைக்கோட்டை வீரரான நேரு அவர்கள் இன்றைக்கு சேலத்தில் மக்கள் கோட்டையை திரட்டி காட்டியிருக்கிறார். அவருக்கு துணை நின்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்கள் அத்தனை பேருக்கும், மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேருக்கும் நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடங்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் சேலம் மாநகரில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்துவிட்டு மனநிறைவுடன் இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன்.

சேலத்தில் ஏற்கனவே 27.8.2019 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் சிலை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது சேலம் மாநகராட்சியின் சார்பிலே பேரறிஞர் அண்ணா பூங்காவில் தலைவர் கலைஞர் அவர்களின் சிலை திறக்கப்பட்டுள்ளது.

அண்ணாவின் பூங்காவில் பூத்த மணம் தரும் மலர்தான் தலைவர் கலைஞர் அவர்கள். சேலத்துக்கும் தலைவர் கலைஞருக்குமான நட்பு என்பது அன்பான நட்பு. ஒரு குடும்ப நட்பு. தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முழு கதை, வசனகர்த்தாவாக ஆக்கிய ஊர் இந்த சேலம்.

இன்றைக்கும் சேலத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் முகப்பு கம்பீரமாகக் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. அந்த மாடர்ன் தியேட்டர்ஸின் உரிமையாளர் டி.ஆர்.சுந்தரம் அவர்கள். திரைப்படத் தயாரிப்பாளரான சுந்தரம் அவர்கள்தான் தலைவர் கலைஞர் அவர்களை சேலத்துக்கு அழைத்தார்கள். அப்போது தலைவர் கலைஞருக்கு 500 ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள்.

### கலைஞரின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஊர், சேலம்!

"இங்கே பணியாற்ற வருவதன் காரணமாக எனது இயக்கப் பணிகள், கழகப் பணிகளுக்கு எந்த இடையூறும் வரக்கூடாது" என்று நிபந்தனை வைத்து – "அப்படி எதுவும் இருக்காது" என்று சுந்தரம் அவர்கள் சொன்ன பிறகுதான் தலைவர் அவர்கள் சேலத்தில் தங்கிப் பணியாற்ற ஒப்புக் கொண்டார்கள்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### 9 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் ஒரு சிறப்புத் திட்டம் கூட அளிக்கவில்லை!

# தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற வேஷம் போடுகிறார் அமித்ஷா!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு காட்டமான பதிலடி!

சென்னை, ஜூன் 13–

"ஒன்பது ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு ஒரு சிறப்புத் திட்டம் கூட அளிக்கப்படவில்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்கள் மீது பாசம் இருப்பது போல் மக்களை ஏமாற்ற உள்துறை அமைச்சர் அமித்ஷா வேஷம் போடுகிறார்" என்று கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் ஆதாரங்களை அடுக்கடுக்காக எடுத்துக்காட்டி பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

*தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் தளபதி நேற்றைய தினம் கேட்ட கேள்விக்கு ஆக்கப்பூர்வமாக பதில் சொல்ல முடியாத ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள், முழுக்க முழுக்க கற்பனைக் கதையை உருவாக்கி, தமிழ்நாட்டிற்குப் பல திட்டங்களை அள்ளி வீசியது போல் "கானல் நீர்" தோற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்திருக்கிறார். தமிழ்நாடு, பா.ஜ.க. ஆட்சியில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பது அக்மார்க் உண்மை என்பதை அமித்ஷாவே புரிந்து கொண்டு, திசை திருப்பி தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றலாம் என நினைக்கிறார்.*

*ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க. பங்கேற்றிருந்த போது தமிழ்நாட்டிற்கு சாதித்த திட்டங்களை மிக அழகாக பட்டியலிட்டார் எங்கள் முதலமைச்சர். அது போன்ற சாதனைமிக்க சிறப்புத் திட்டங்கள் ஒன்று கூட இந்த 9 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு கொடுக்கவில்லை என்பதுதான் எங்கள் கழகத் தலைவரின் அடிப்படையான குற்றச்சாட்டு.*

### திணறிப்போன அமித்ஷா!

*தன்னுடைய பேச்சில் அப்படியொரு சிறப்புத் திட்டத்தை சுட்டிக் காட்ட முடியாமல் திணறிப் போன உள்துறை அமைச்சர், வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ எனப் பேசி, "தமிழ்நாட்டிற்கு பா.ஜ.க. ஆட்சியில் ஒரு சிறப்புத் திட்டமும் நிறைவேற்றவில்லை" என்று வேலூரில் வெளிப்படையாகப் பேசிக் கைவிரித்துள்ளார்.*

*உள்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ள நிதி ஒதுக்கீடுகள், மானியங்கள், ஒன்றிய அரசு மாநில அரசுக்கு கொடுக்க வேண்டிய அரசியல் சட்டக் கடமை. அது பா.ஜ.க.ஆட்சியில் இருப்பதால் வந்தது இல்லை. எந்த அரசு ஒன்றியத்தில் இருந்தாலும் அதைக் கொடுக்காமல் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக ஜி.எஸ்.டி மூலம் தமிழ்நாட்டிலிருந்து அதிக வருவாய் ஒன்றியத்திற்குக் கிடைக்கும்போது கூட தமிழ்நாட்டை ஏறெடுத்துப் பார்க்கவில்லை.*



*அதற்கு பதில், தமிழ்நாட்டில் வசூலித்து உ.பி.யிலும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலும் செலவழிப்பதுதான் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி.*

### தேசிய நெடுஞ்சாலை வழித்தடங்கள்: தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசு!

தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்கனவே தமிழ்நாடு முன்னணி மாநிலமாக இருக்கிறது. அதற்கும் பா.ஜ.க. அரசு ஒன்றும் பங்களிப்பு செய்திடவில்லை. ஏதாவது ஒரு நெடுஞ்சாலைத் திட்டத்தைக் கொண்டு வந்தால் கூட ஆந்திரா, கர்நாடக பயன்பெற்று அதில் மீதி தமிழ்நாடு பயன்பெறும் வகையில்தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டதே தவிர, தமிழ்நாட்டிற்கு என்று பிரத்தியேகமாக எந்த நெடுஞ்சாலை சிறப்புத் திட்டத்தையும் அளிக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய தேசிய நெடுஞ்சாலை வழித்தடங்களை முன்பு முதலமைச்சராக இருந்த சந்திரபாபு நாயுடு அவர்களின் அழுத்தத்திற்கு பயந்து மாற்றி தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்ததுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு.

### பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டுக்கு தந்த வேதனைகள்!

*தமிழ்நாட்டை எப்படி ஒன்றிய அரசு வஞ்சித்துள்ளது என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன்.*

**ஒன்றிய வரிகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு நிதி ஆணையம் பகிர்ந்தளிப்பது குறைக்கப்பட்டுள்ளது பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய ஆட்சியில்தான்!**

**ஒன்றிய வரி வருவாய்க்கு தமிழ்நாடு அளிப்பது 1.6 லட்சம் கோடி ரூபாய். ஆனால் அந்த ஒன்றிய வரி வருவாயிலிருந்து தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிப்பது வெறும் 41 ஆயிரம் கோடி ரூபாய். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒன்றிய வரி வருவாய்க்கு 100 ரூபாய் தமிழ்நாடு கொடுத்தால், பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டிற்கு 20 ரூபாய் திருப்பிக் கொடுக்கிறது. இதை விட மோசமாக நிதி ஒதுக்குவோம் எதிர்காலத்தில் என இப்போது வேலூரில் 25 எம்.பி. தொகுதி கொடுங்கள் என கேட்கிறாரா உள்துறை அமைச்சர்?**

**தமிழ்நாட்டிற்கு கடந்த 9 வருடத்தில் இரண்டு லட்சத்து 47 ஆயிரம் கோடி ரூபாயைப் பிரதமர் அளித்ததாக கூறும் பொழுது, அதே காலகட்டத்தில் உத்தரபிரதேசத்திற்கு 10 லட்சத்து 73 ஆயிரம் கோடியை அள்ளித் தந்ததை ஏன் மறைக்க வேண்டும்?**

> "மூழ்கும் கப்பலாக" இருக்கும் பா.ஜ.க. இன்னும் எத்தனைக் கற்பனை கதைகள், ஏவல் படைகளுடன் தமிழ்நாட்டிற்குள் நுழைந்தாலும் தமிழ்நாட்டு மக்கள் ஒரு எம்.பி சீட்டைக் கூட கொடுக்க மாட்டார்கள் என்று மரியாதைக்குரிய அமித்ஷா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**நிதிப் பகிர்வில் முக்கியத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதில் தலைநகர் தில்லி தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது. பேரறிஞர் அண்ணாவின் மொழியில் சொன்னால் "வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்ந்து கொண்டே போகிறது"**

**ஒன்பது ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சி என்பது, சென்னை மாநகரத்திற்குப் பேரிடர் மேலாண்மைக்காக நிதி ஆணையம் பரிந்துரைத்த 500 கோடி ரூபாய் நிதியை இரண்டு ஆண்டுகளாக கொடுக்காத ஆட்சி. 2015இல் அறிவிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை இது வரை கட்டாத ஆட்சி. இதுவரை அதற்கு நிதி கூட ஒதுக்காமல் அநீதி இழைக்கும் ஆட்சி. சென்னை மெட்ரோ ரயில்II திட்டத்திற்கு 2019 இல் நிதி கேட்டும் இன்று வரை ஒப்புதல் வழங்காத ஆட்சி. தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத்திற்கான கோரிக்கையைக் கிடப்பில் போட்டு வைத்துள்ள ஆட்சி. ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையிலும் தமிழ்நாட்டின் ரயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்காமல் புறக்கணித்த ஆட்சி.**

**இவையெல்லாம்தான் பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டிற்கு தந்த வேதனைகள்.**

### மாற்றாந்தாய் மனப்பான்மை!

*குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், 2023-2024 பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் ரயில் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2.5 விழுக்காடு. கடந்த 5 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் ரயில் திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி 18 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால் 2023 24 ஒரு நிதியாண்டில் மட்டும் உத்தர பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 17,500 கோடி ரூபாய். மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதே பா.ஜ.க. ஆட்சியில்தான் என்பதற்கு இதை விட*

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்